இந்த DMF எனக்கு அவ்வளவாக இங்கிலீஷ் எல்லாம் தெரியாது. ஏறத்தாழ அந்த DMF என்று சொன்ன அந்த விஷயம் மட்டும் எனக்கு தெரியும். அதாவது இந்த மாவட்ட கனிம சரக அமைப்பு என்ற அமைப்பு அங்கே இருக்கும் குவாரிகளில் இருந்து ஒரு அமௌண்ட்டை கலெக்ட் செய்து கலெக்டரிடம் கொடுப்போம். அந்த அமைப்பிற்கு கலெக்டர்தான் ஹெட். அந்த நிதி அமைப்பிற்கு கலெக்டர்தான் சுற்றுப்புற சூழலில் இருக்கக் கூடிய கிராமங்களுக்கு எல்லாம் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தார்கள். உதாரணத்திற்கு, ஒரு சிமெண்ட் சாலை அமைப்பது, ஒரு தண்ணீர் வசதி செய்து தருவது பக்கத்தில் இருக்கக்கூடிய கிராமங்களுக்கு நல்ல விஷயங்கள் செய்தார்கள் அதேமாதிரி என்னுடைய சொந்த ஊர் இந்த தேவண்ணகவுண்டனூர். அந்த ஊரில் இந்த கல்குவாரிகள் இயங்குகிற வரைக்கும் சில அடிப்படை வசதிகள் செய்து கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். இந்த படிப்பறிவு இல்லாதவர்களுக்கு ஒரு விஷயம் நன்றாக தெரியும். என்னவென்றால், வீட்டுக்கு வீடு கடவுள் இருக்க முடியாது என்றுதான் வீட்டுக்கு வீடு ஒரு அம்மா இருக்கிறார். அதுமாதிரி எங்களுடைய அடிப்படை ஆதாரத்தை, அரசாங்கம் நேரடியாக செய்து கொடுக்க முடியாத ஒரு சில விஷயங்கள் கூட இந்த DMF பணத்தை வைத்து எங்களுக்கு ஓரளவுக்கு பூர்த்தி ஆனது. இந்த குவாரி என்றைக்கு மூடினார்களோ அதெல்லாம் அப்படியே நின்று போனது. ஏதோ எங்களுடைய வாழ்வாதாரத்தை கொஞ்சம் உயர்த்தணும் என்றால் மறுபடியும் அந்த குவாரியை திறந்தால் நன்றாக இருக்கும்.

இந்த குவாரியை எதற்கு மூடினார்கள் என்று எங்களுக்கு இதுவரை தெரியவில்லை. ஆனால் ஒரு சில படித்தவர்கள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால் ரொம்ப மாசு அதிகமாகிறது, அதனால்தான் மூடிவிட்டார்கள் என்று, கனிம வளத்தை மிகவும் சுரண்டிவிட்டார்கள் என்று. எனக்கு தெரிந்த அளவிற்கு நான் கேட்கிறேன், எனக்கு சரியான முறையில் தெரியவில்லை, கேட்பது சரியா, தப்பா என்று கூட எனக்கு தெரியவில்லை. ஆனால் கேட்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் கேட்கிறேன். அதாவது இந்த மாசு கட்டுப்பாடு வாரியம் என்று சொல்கிறார்கள். இந்த குவாரியால் என்னென்ன மாசு வரும் என்றால் ஓரளவுக்கு நிலம் மாசுபாடு, நீர் மாசுபாடு, காற்று மாசுபாடு, ஒலி மாசுபாடு என்று சொல்வார்கள்.

இந்த நான்கும் நடைபெற வாய்ப்பிருக்கிறது. ஆனால் இப்பொழுது நவீன காலகட்டத்தில் பார்த்தீர்கள் என்றால் வளர்ந்த தொழில் நுட்பம் கொண்ட புதிய புதிய இயந்திரங்கள் வந்துவிட்டன. அந்த மெஷினை வைத்து ஒரு பாறையை கட் பண்ணும்போது அந்த அளவிற்கு ஒலி வருமா என்பது எங்களுக்கு தெரியவில்லை. அதனால் ஒலி மாசுபாடு என்பது எனக்கு தெரிந்த அளவில், ஐயா எல்லாம் இன்ஜினியர் அவர்களுக்கு பெரிய அளவில் தெரியும், எனக்கு தெரிந்ததை வைத்து சொல்கிறேன். அந்த அளவிற்கு வர வாய்ப்பில்லை. அடுத்ததாக இந்த ரசாயன கழிவு என்று ஏதோ சொல்கிறார்கள். அந்த மாதிரி இங்கு எதுவும் பயன்படுத்துவதாக எங்கள் அறிவுக்கு எட்டின வரை எதுவும் தெரியவில்லை. ஆக தண்ணீர் மாசுபாடு எதுவும் இல்லை. எந்த ஒரு கெமிக்கலோ, பொருளோ யூஸ் பண்ணி எதுவும் செய்யாததால் நில மாசுபாடு இருப்பதாக எங்களுக்கு தெரியவில்லை. எந்த மாசும் இல்லாத ஒரு காரணத்தில், ஏதற்கு சுற்றுச்சூழல் மாசு என்ற காரணத்தினை காட்டி மூடினார்கள் என்று, இன்று வரை எங்களுக்கு விடை தெரியவில்லை. அந்த அளவுக்கு நாம் பார்க்க போனோம் என்று சொன்னால், இன்றைக்கு ஒரு உதாரணத்திற்கு சொல்கிறேன். வண்டியில் இரயிலில் போகிறோம். ஒரு சில இடங்களில் ரயில் ஆக்ஸிடென்ட் நடக்கிறது. அதற்கென்று ரயிலை யூஸ் பண்ணாமல் நாம் இருக்கிறோமா? இல்லை, யூஸ் செய்கிறோம். அதுபோல், ஏதோ ஒரு சில நிகழ்வுகள் ஏதோ ஒரு சில மாசுபாடு இருந்தாலும், எங்களுடைய வாழ்வாதாரத்தை அடிப்படையாக வைத்து நாங்கள் கெஞ்சி மன்றாடி கேட்டுக் கொள்கிறோம். அந்த குவாரிகளை திறந்து மறுபடியும் எங்கள் வாழ்க்கையை புரைமைத்தால் நன்றாக இருக்கும்.

அதாவது, ஒரு உதாரணத்திற்கு, எங்கே குவாரி இருக்கிறதோ அந்த குவாரியை சுற்றி ஒரு நூறு கிலோ மீட்டருக்கு, ஒரு அமைப்பிற்குத்தான் சொல்கிறேன், எனக்கு புள்ளி விபரம் சரியாக தெரியவில்லை. எங்கள் ஊரை சுற்றி உள்ள நிறைய கிராமங்கள் எல்லாம் சேர்ந்து இது குவாரி அமைக்கப்பட்ட பகுதி என ஒரு முத்திரையை அரசாங்கம் குத்திவிடுகிறது. அப்போ, எந்த ஒரு நல்ல திட்டத்திற்கும் நாங்கள் அரசாங்கத்திடம் போனால் அது கனிம வளத்தில் வருகிறது. அது சார்ந்த ஒரு பயன்பாட்டை மட்டும்தான் நீங்கள் அனுபவிக்க

முடியும் என்று சொல்லி விடுகிறார்கள். அதாவது உள்ளதும் போச்சுடா நொள்ள கண்ணா என்று இருக்கிறதும் போய்விட்டது. அது பட்டா நிலத்தில் வருகிறது. அரசு அமைப்பில் கிடைக்கக் கூடிய எந்த ஒரு சலுகையும் கிடைப்பதில்லை. காரணம் என்னவென்றால் அது குவாரி, கனிம வள அமைபில் போய் விட்டது, நீங்கள் அங்கே சென்று தான் நலனை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு பர்மிட் போட்டு கொடுத்த அதிகாரிகள் இப்பொழுது அந்த குவாரியை மூடிவிட்டார்கள். இந்த மாதிரியான ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டோம். அரசாங்கம் கொஞ்சம் உதவி செய்து அரசாங்கம் எங்களுடைய வாழ்வாதாரத்தை மறுபடியும் புனரமைப்பு செய்தால் நன்றாக இருக்கும். அதாவது அண்ணா சொல்லுவார், சட்ட சபையில் ஆட்சி அமைந்தால் ஆளுங்கட்சியும் எதிர்கட்சியும் ஒரு நாணயத்தில் இரண்டு பக்கம் என்று சொல்வார். இதில் எந்த பக்கம் சரியில்லை என்றாலும் அந்தக் காசு ஒரு சொல்லாத காசு. அதுமாதிரி, அங்கே குவாரியில் வேலை செய்யும் நாங்கள் மட்டும் இதை பேசி புண்ணியம் இல்லை. மாண்புமிகு, மரியாதைக்குரிய இந்த அரசு அதிகாரிகளும் எங்கள் ஆதங்கத்தினை ஏற்று, அரசாங்கத்திற்கு அதை சரியான முறையில் ஒரு ஆவன அமைப்பாக கொடுத்து இந்த குவாரியை திறந்தார்கள் என்றால் ரொம்ப நன்றாக இருக்கும் என்பது எங்களின் ஒரு பணிவான வேண்டுகோள். இதை வாழ்வாதாரத்தை அடிப்படையாக வைத்து, அந்த குவாரி கிட்டத்தட்ட நாற்பது ஐம்பது ஆண்டுகாலமாக செயல்பாட்டில் இருந்து வந்துள்ளது. ஒரு மனிதனுடைய ஆயுட்காலம், இன்று பார்த்தீர்கள் என்றால் ஒரு அறுபதிலிருந்து எழுபது வயது வரைதான். அப்போ இந்து ஐம்பது வருடத்தில் ஒரு இரண்டு தலைமுறை மக்கள் இந்த குவாரியை நம்பி நாங்கள் வாழ்ந்து விட்டோம். இப்பொழுது திடீர் என நீங்கள் இந்த குவாரியை மூடினீர்கள் என்றால், இங்கே இருந்து நாங்கள் இடம் விட்டு இடம் மாறுதல் செய்து வேறு ஒரு ஊரில் சென்று பிழைக்க வேண்டும். கோடி கோடியாக வாங்கிவிட்டு விமானத்தில் அடுத்த நாட்டுக்கு சென்று விட்டவர்களையெல்லாம் கண்டு கொள்ளாத இந்த அரசாங்கம் சொந்த ஊரில் நாங்கள் எங்கள் அடிப்படையை கேட்டு பிச்சையெடுக்கும் ஒரு சூழலுக்கு வரும்படி ஆகிவிட்டது எங்கள் நிலைமை. அதனால் அரசாங்கம் தயவு கூர்ந்து

எங்களுடைய அடிப்படை அமைப்புகளுக்கு உதவி செய்யக்கூடிய இந்த குவாரிகளை திறந்தால் ரொம்ப நன்றாக இருக்கும் என கேட்டுக்கொண்டு இந்த குவாரியை நம்பி, எங்களுடைய அன்பர்கள் எல்லாம் நிறைய வட்டிக்கு வாங்கி லாரி, டிராக்டர் எல்லாம் வாங்கி குவாரி என்றால் குவாரி மட்டும் இல்லை. அங்கிருந்து கற்களை எடுத்துக் கொண்டு செல்ல, ஆட்களை கூட்டி வர அது மாதிரியான வண்டிகள் எல்லாம் போட்டு விட்டார்கள்.

அதாவது ஒன்று செல்வார்கள், வட்டிக்கு வாங்கி அட்டிகை பண்ணாளாம் அக்கா மகள், அட்டிகையை விற்று வட்டியைத்தான் கட்டினாளாம் என்ற கதையாக போனது எங்கள் கதை, வட்டிக்கு வாங்கி, வண்டியெல்லாம் வாங்கி, குவாரியை மூடி, அதற்கு வட்டி கட்ட முடியாமல் வாங்கின வண்டியை எப்போது வந்து எடுத்துக் கொண்டு போவார்கள் என்று தெரியாமல், இவ்வளவு சிக்கலை சந்திக்கிற எங்களுக்கு தயவு கூர்ந்து அந்த குவாரியை திறந்தால் மட்டும்தான் எங்களுக்கு வாழ்வாதாரம் என்று சொல்லிக் கொண்டு, இந்த இடத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தற்கு நன்றி கூறி, ஏதாவது தவறாக பேசி இருந்தால் மன்னிப்பு, இவ்வளவும் எங்களுடைய ஆதங்கம் எங்களுடைய குமுறலைத்தான் நாங்கள் கொட்டுகிறோம். தயவு செய்து இந்த குவாரியை திறந்து எங்களை மாதிரியான ஆட்களுக்கு ஒரு விடிவெள்ளியை கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். வணக்கம்.

6. <u>திரு. இரமேஷ், பறையங்காட்டானூர்:</u>

வணக்கம், என்னுடைய பெயர் இரமேஷ், பறையங்காட்டானூர், தேவண்ணகவுண்டனூர் பஞ்சாயத்து. தேவண்ணகவுண்டனூர் ஊராட்சியில் குவாரி எத்தனை இருக்கிறது, பர்மிட் எத்தனை கொடுத்திருக்கிறார்கள் என்று எங்களுக்கு தெரியாது. இது வரைக்கும், இந்த தேவண்ணகவுண்டனூர் ஊராட்சியில் இருக்கும் குவாரிகளில் இருந்து வேலை செய்கிறார்கள், நண்பர் சொன்னார் அதிலிருந்து வாழ்வாதாரம், இருக்கிறது பாதிக்கிறது என்று. அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அதாவது பொது நலமா ஒரு ஸ்கூல், இதற்கெல்லாம் வந்து என்னென்ன சலுகை செய்திருக்கிறார்கள்? இந்த ரோடு,

ஒவரா கல் வைத்து ஓட்டுகிறார்கள் இந்த குவாரியில், இந்த குவாரி வண்டி ஓட்டுவதினால், இதனால் ரோடு முழுவதும் டேமேஜ் ஆகி விடுகிறது. ஒரு நாளைக்கு இருபது பேர், முப்பது பேர் பஞ்சாயத்து ஆஃபிஸில் இருந்து வருகிறார்கள், ரோடு போய்விட்டது, இதற்கு மண் கொட்டி கொடுங்கள், ரோடு போட்டுக் கொடுங்கள் என்று சொல்லி. ஓவர்லோடு கல் லோடு. இந்த குவாரி நடத்துவதினால் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. இந்த மாதிரி எல்லாம் செய்வதனால், ஒரு ஸ்கூலிற்கு என்ன செய்திருக்கிறார்கள்? எத்தனை இடத்தில் ரோடு போட்டு கொடுத்து இருக்கிறார்கள்? பப்ளிக்கிற்கு என்ன செய்திருக்கிறார்கள்? இந்த மாதிரி ஒரு கைட்லைன் ரூல் இருக்கிறதா? இல்லையா? மணங்காடு இருக்கிறது என்றால், மணங்காட்டை ஒட்டி காப்புக் காடு இருக்கிறது. அந்த காப்புக்காட்டிற்கும் குவாரிக்கும் எவ்வளவு கிலோமீட்டர் டிஸ்டன்ஸ் இருந்தால் குவாரி கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் எங்களுக்கு தெரியவில்லை. அதனால் இந்த மாதிரி முறையெல்லாம் வரைமுறைபடுத்தி, அதை சரி செய்து, அதற்கு பிறகு குவாரி இயங்க நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும் என கேட்டுக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

7. <u>திரு. கந்தசாமி, வால்பாறைகாடு:</u>

எல்லோருக்கும் வணக்கம். இங்கே இருக்கும் கனிம வளத்துறை அதிகாரிகளுக்கும், கனிம வளத்தை சார்ந்த தொழில் செய்பவர்களுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும், இங்கே இருக்கும் சுற்று சூழல் துறை அதிகாரிகளுக்கும் பணிவான வணக்கத்தினை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன் என்னுடைய பெயர் தேவண்ணகவுண்டனூரை சேர்ந்த, வால்பாறைகாட்டை சேர்ந்த கந்தசாமி என்ற விவசாயி, இப்போ எல்லோருமே அவரவர்களின் தொழிலைப் பற்றியே ஒரு சாயலாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் நிறைய இதில் இழப்பீட்டை சந்திக்கக் கூடிய சில சூழல்கள் ஏற்படுகிறது. காரணம் அந்த ஒரு இடத்தில் கல்லை எடுத்துக்கொண்டு பர்மிஷன் வாங்கினவர்கள் அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்கிறார்கள். இரண்டாவது அதை சுற்றி

இருக்கிற விவசாயிகளுக்குகோ, அங்கே இருக்கும் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கோ, இல்லை விவசாயத்தை சார்ந்த தொழிலை செய்கிறவர்களுக்கோ எந்த முன்னுரிமையும், இந்த அரசோ இல்லை அந்த சுரங்கத்தை சார்ந்தவர்களோ, சுற்றுச்சூழல் அதிகாரிகளோ பரிந்துரை செய்து எங்களுக்கு எதுவும் இதுவரை வழங்கவில்லை. இப்போ, சுற்றளவு ஒரு கிராமத்தில், ஒரு அஞ்சு கிலோமீட்டர் சுற்றளவில் விவசாயிகள் விரும்பினால், அந்த விவசாயிகளிடத்தில், இப்பொழுது ஒரு நண்பர் சொன்னார், எண்பது சதவிகிதம் வேஸ்டேஜ் உருவாகிறது, என்று செல்கிறார்கள். அந்த வேஸ்டேஜை அரசு மூலமாக குறைந்த கட்டணத்தில் அந்த விவசாயிகள் அந்த கல்லை வெளியே எடுத்து மக்கள் பயன்பாட்டிற்கு, ஒரு வீடு கட்ட, ஒரு காட்டுக்கு கட்ட, அதில் சில குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படும். அதற்கு ஒரே காரணம், அரசு இதை கவனத்தில் எடுத்து, சுற்றுச்சூழல் துறை அதிகாரி ஐயா அவர்களும், அரசு தலைமைக்கு கொண்டு சென்று இந்த விவசாயிகளுக்காக இந்த பணியை செய்யவும், அங்கு இருக்கும் ரோடு வசதிகளை, அண்ணன் முன்னால் சொன்னது போல பராமரிப்பை சரியாக செய்து கொடுக்கவும், இந்த நிர்வாகத்தை கேட்டுக் கொள்வதோடு எல்லோர் சார்பாகவும் நான் நன்றியையும் வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

8. <u>திரு. நடேசன், மஞ்சக்கல்பட்டி:</u>

வணக்கம் நான் தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி மஞ்சக்கல்பட்டியை சேர்ந்தவன். நான் குவாரி டிரில்ராடு சப்ளை செய்யும் தொழில் செய்கிறேன். என்னுடைய தொழிலில் இருந்து, பல குடும்பங்கள் என்னை வைத்து வாழ்வாதாரத்தை தேடிக் கொண்டு இருக்கிறார்கள். குவாரி செய்கிறவர்கள், நன்றாக சுற்றுச் சுவர் கட்டி, நன்றாக கம்பி வேலி போட்டு, பிராப்பராக பொது மக்களுக்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் செய்து கொண்டு இருக்கிறார்கள். சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லை. நீங்கள் தாராளமாக அனுமதி கொடுக்கலாம். அதே மாதிரி விவசாயிகளுக்கு பக்கத்தில் தண்ணீர் வேண்டும் என்றாலும் தண்ணீர் சப்ளை செய்கிறார்கள். மற்ற கோயிலுக்கு, மற்ற

விசேஷங்களுக்கு ஏதாவது நன்கொடை வேண்டும் என்றாலும் உடனே கொடுத்து முன்னாடி நின்று செய்து கொடுக்கிறார்கள். அதனால் நீங்கள் தாராளமாக அனுமதி வழங்கலாம் என கேட்டுக் கொள்கிறேன்.

9. <u>திரு. பரமசிவம், தேவண்ணகவுண்டனூர்:</u>

சார் வணக்கம். என்னுடைய பெயர் பரமசிவம், தேவண்ணகவுண்டனூர். இப்போ நாலு வருஷமா இந்த குவாரியில் வேலை செய்து கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு வேலை இல்லாமல் சும்மா இருக்கிறோம். இப்பொழுது நான்கு வருடமாக சுமார் ஐம்பது குடும்பங்கள் சும்மா இருக்கின்றோம். எங்களுக்கு வேலை இல்லை. இந்த தொழிலை தவிர வேறு எந்த தொழிலும் எங்களுக்கு தெரியாது. இவர்கள்தான் எங்களுக்கு உதவி செய்து கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் ஐம்பது குடும்பங்கள் இருக்கிறோம். கோவிலுக்கோ மற்ற விஷயங்களுக்கோ உதவி செய்கிறார்கள். இதை நம்பித்தான் இருக்கிறோம். இங்கே வேலை செய்வதினால் எந்த பிரச்சினையும் கிடையாது, எங்களுக்கு வேறு வேலை எதுவும் தெரியாது. கண்டிப்பாக இந்த உதவி செய்ய வேண்டும்.

10. <u>திரு. முருகன், எடப்பாடி:</u>

வணக்கம், முருகன், எடப்பாடி. நமது கார்டு கிரானைட் அவர்கள் இடைப்பாடையை சார்ந்துள்ள ஆலயங்களுக்கு நிறைய உதவிகள் செய்து இருக்கின்றார்கள். குறிப்பாக நமது எடப்பாடி நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோவிலுக்கு சென்றால் அங்கே அமைக்கப்பட்டிருக்கக் கூடிய அத்தனை கிராணைட் கற்களும் ஏறக்குறைய முப்பத்து ஐந்து லட்சம் முதல் நாற்பத்து ஐந்து லட்சம் வரை, அதற்கு மணல், கிரானைட் கற்கள், சிமெண்ட் உள்பட கொடுத்து அந்த அரசு கோயிலுக்கு, அது HR & CE –ன் கீழ் இருக்கக் கூடிய ஆலயம். அந்த ஆலயத்திற்கு, ஏறக்குறைய முப்பத்து ஐந்து லட்சம் முதல் நாற்பது லட்சம் வரை செய்திருக்கின்றார்கள். அது மட்டுமல்லாது, ஆண்டு தோறும் அந்த கோயில் நிகழ்வுகளில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியில் பங்கு கொண்டு பொது மக்களுக்கு நிறைய அன்னதானங்கள் போன்ற நிகழ்வுகளுக்கு செய்து வருகின்றார்கள்.

அதுமட்டுமல்லாது, சுற்றி இருக்கக் கூடிய நிறைய ஆலயங்களுக்கு அவர்களால் ஆன அந்த கிரானைட் கற்களை கொடுத்தும் ஆன உதவிகளை செய்தும், நிறையாக செய்து வருகிறார்கள். அது நாம் நினைத்தாலும, அவ்வளவு செலவு செய்து அந்த ஆலயங்களை நம்மால் புனரமைக்க முடியாது. அப்படிப்பட்ட திருப்பணிகளை நிறைய செய்து வந்திருக்கின்றார்கள் முதற்கண் அவர்களும், அவர்கள் குடும்பமும் நன்றாக இருக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்தனை செய்து கொண்டு, இங்கே வந்திருக்கக் கூடிய அதிகாரி அவர்களுக்கும், அந்த கிரானைட் குவாரியானது சரியான பாதுகாப்புடன் அமைக்கப்பட்டு, மேலும் அங்கே செல்லக் கூடியவர்களுக்கும் உரிய மரியாதை, உரிய முதலுதவிகளையெல்லாம் செய்யப்பட்டிருப்பதை நாங்கள் உள்ளே சென்று ஒருமுறை பார்த்திருந்தோம். ஆகவே இந்த குவாரி இங்கே இயங்கினால் பொதுமக்களும், கிராம வாசிகளும், இடைப்பாடி நகர வாசிகளும் நன்றாக இருக்கும் என்று தாழ்மையான கருத்தை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

11. <u>திருமதி. ஜெயந்தி, மலையனூர்:</u>

என் பெயர் ஜெயந்தி, நான் மலையனூர். மலையனூரில் எனக்கு நான்கு ஏக்கர் நிலம் உள்ளது. தண்ணீர் இல்லாத போது, அந்த குவாரியல் இருந்து எனக்கு தண்ணீர் கொடுத்து உதவி செய்தார்கள். அதனால் குவாரி திறக்கலாம். இதில் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை, எங்களுக்கு எந்த சுற்றுச் சூழலையும் பாதிப்பு ஏற்படுத்துவது இல்லை. அதனால் குவாரியை திறந்தால் நன்றாக இருக்கும்.

12. <u>திருமதி. கவிதா, வீரப்பன்பாளையம்:</u>

அனைவருக்கும் வணக்கம், என் பெயர் கவிதா. நான் வீரப்பன்பாளையத்தில் இருந்து வருகிறேன். நாங்கள் வீரப்பன்பாளையத்தில் விவசாயம் செய்து கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு தெரியும், விவசாயம் என்றால் எவ்வளவு கஷ்டம் என்று. அப்படி மழையும் பெய்யாத காலத்தில் இந்த

குவாரியில் இருந்துதான் எங்களுக்கு தண்ணீர் கிடைத்தது. அதைவைத்து நாங்கள் விவசாயம் நன்றாக செய்து கொண்டிருந்தோம். இப்பொழுது குவாரியை மூடியதால் விவசாயமும் சரியாக இல்லை. நாங்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறோம். அது மட்டுமில்லாமல், இந்த குவாரி செய்வதினால் ஒலி மாசுபாடு, காற்று மாசுபாடு எதுவும் எங்களுக்கு இருந்ததேயில்லை. பக்கத்தில்தான் இருக்கிறோம். நன்றாகத்தான் இருக்கிறது. அதனால் இந்த குவாரியை திறக்கலாம் என்று எங்களுடைய கருத்தை தெரிவிக்கின்றோம். நன்றி.

13. <u>திரு. செங்கோட்டுவேல், தங்காயூர்:</u>

தங்காயூர் கிராமத்தில் இருந்து வருகிறேன். செங்கோட்டு வேல். நாங்கள் குவாரிக்கு பக்கத்தில்தான் குடி இருக்கிறோம். குவாரிக்கு பக்கத்தில் குடியிருப்பதனால் எங்களுக்கு எந்தவொரு பாதிப்பும் கிடையாது. எங்களுக்கு எங்கே போக வேண்டும் என்றாலும் சுற்றி காம்பவுண்ட் போட்டு இருக்கிறார்கள். பாதுகாப்பாக இருக்கிறது. அதே மாதிரி ஆடு மாடு மேய்க்கப் போனாலும் ஆடு மாடு எதுவும உள்ளே போக முடியாது. ஆட்கள் பர்மிஷன் இல்லாமல் உள்ளே போக முடியாது. அந்த அளவிற்கு செய்து இருக்கிறார்கள். எங்களுக்கு கொரோனா நேரத்தில் கஷ்டம் என்று சொன்னால், தண்ணீர் எங்களுக்கு இல்லை, டேங்க் போட்டு தண்ணீரை கொண்டு வந்து எங்களுக்கு சப்ளை செய்தார்கள். அப்படி இருக்கும்போது, எங்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் கிடையாது. அவர்கள் நல்ல நிலைமையில் எங்களுக்கு செய்து கொடுத்து இருக்கிறார்கள். எங்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லை. நன்றாக பர்மிஷன் வழங்கலாம். வணக்கம்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம்:</u>

பொது மக்கள் தங்கள் கருத்துகளை முன்வந்து தெரிவிக்கலாம்.

14. <u>திரு. A P நஞ்சப்பன், ஆலச்சிபாளையம்:</u>

இந்த குவாரியினுடைய கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுமக்களை தங்கள் கருத்துக்களை கேட்டு எனது பெயர் A P நஞ்சப்பன், ஆலச்சிபாளையம், இடைப்பாடி நகரம். ஆகவே இந்த குவாரி நடப்பதை பற்றி எந்த

விதமான ஆட்சேபணையும் இல்லை. காரணம் ஒரு தொழில் செய்தால், அந்த தொழில் சம்பந்தமான வேஸ்ட்டுகளை பராமரித்து ஒழுங்காக வைத்துக் கொள்வதுதான் கடமை. ஆகவே அதை மீறியும் சில விஷயங்கள் தவறுதலாக நடந்து அது பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய சூழல் ஏற்படலாம். ஆனால் அது இல்லாமல் எந்த தொழிலையும் நடத்த முடியாது. ஆனால் அதை நடத்துவது பற்றி இதை நான் மிக மிக வரவேற்கிறேன். இந்த தொழில் நடைபெறுமானால், இங்கே இருக்கக்கூடிய, இடைப்பாடியை சுற்றி இருக்கக் கூடிய இந்த தேவண்ணகவுண்டனூர், மணங்காடு, ஆகிய பகுதிகளில் இருக்கக் கூடிய பொதுமக்கள் ஒரு நூறு குடும்பங்கள் வாழ்வாதாரத்தை பெற்று வாழ்வதற்கு ரொம்ப ஒரு உறுதுணையாக இருக்கிறது. ஆகவே இந்த குவாரியை. இங்கே ஒரு ஐந்து ஆறு குவாரிகள் இருக்கிறது. அதிலே ஒரு சின்ன விஷயத்தை உங்களிடையே நான் மன்றாடி கேட்டுக்கொள்கிறேன். இந்த குவாரியில் கல் வேஸ்ட் எடுக்கின்ற குழிகளை தண்ணீர் நிரம்பி விடுகிறது. அந்த நிரம்பி இருக்கின்ற தண்ணீர் இங்கே பக்கத்திலே பெரியேரி என்று ஒன்று இருக்கின்றது. அதனுடைய பாசனம் ஒரு அறுபது ஏக்கர் பாய்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த தண்ணீர் இங்கே போய் தங்குவதினால், வருடா வருடம் இந்த தண்ணீர் அந்த ஏரிக்கு செல்ல முடியவில்லை. ஆகவே இந்த தண்ணீரை அங்கு தேக்காமல், அதை வழி செய்து அங்கு விட்டாலும் சரி அல்லது அந்த குவாரியை நடத்துகின்றவர்கள் அந்த தண்ணீரை நிரப்புவதற்கு உண்டான ஆவன செய்து கொண்டு இந்த குவாரியை நடைபெறுதற்கு ஆவன செய்யுமாறு ஐயா அவர்களை கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம்:</u>

கருத்து கூற விரும்புகிறவர்கள் வேறு யாரும் இருக்கிறார்களா?

15. <u>திரு. அருண்குமார், தேவண்ணகவுண்டனூர்:</u>

அனைவருக்கும் வணக்கம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு சிரம் தாழ்ந்த வணக்கம். என்னுடைய பெயர் அருண்குமார். தேவண்ணகவுண்டனூரில்

இருந்து வருகிறேன். எற்கனவே அமைக்கப்பட்ட அந்த குவாரி இடைக்காலமாக மூடப்பட்டு இருக்கிறது. இதனால் எங்களுடைய வாழ்வாதாரம் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஓரளவுக்கு படிப்பறிவு இல்லையென்றாலும், நான் திருச்சியில் வெண்ணாம்பாறை என்ற ஊரில் குவாரியில் இதற்கு முன்னால் வேலை செய்து இருக்கின்றேன். அங்கே பார்த்தீர்கள் என்றால் DMF என்ற பணத்தை அங்கே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நாங்கள் எடுத்துக்கொண்டு போய் தருவோம். அதைவைத்து, அந்த அமைப்பில் இருக்கக் கூடிய கிராமங்களுக்கு ஒரு சில நல வசதிகள் செய்து கொடுத்தார்கள். அதாவது ஒரு தார் சாலை அமைப்பது, ஒரு குடிநீர் குழாய் சரி செய்வது இந்த மாதிரி சின்ன சின்ன வேலைகளையெல்லாம் இந்த பணத்தை வைத்து செய்து கொடுத்தார்கள். இதே மாதிரி என்னுடைய சொந்த ஊரிலும், இந்த கிராணைட் குவாரிகள் வேலை செய்து கொண்டு இருந்தவரை, அந்த பணத்தை கொடுத்து இங்கேயும் அந்த மாதிரி நடந்து கொண்டு இருந்தது. கடந்த நான்கு ஐந்து வருடமாக இந்த குவாரியை எப்பொழுது மூடினார்களோ அதிலிருந்து, அதோட அந்த அமைப்பு சார்ந்த அந்த பணத்தை எந்த ஒரு நலத்திட்டமும் கிடைக்க வில்லை, அதாவது அரசாங்கத்தால் எல்லா ஊரிலும், எல்லா இடத்திலும், அதை பராமரிப்பு பண்ணுவது என்பது கொஞ்சம் சிரமம் என்பதால், இந்த மாதிரி குவாரிகளுக்கு அனுமதி கொடுத்து அதன் மூலமாக எங்களுடைய வாழ்வாதாரத்தை மேலே கொண்டு வந்தீர்கள் என்றால் நன்றாக இருக்கும் என்பதை நாங்கள் சிரம் தாழ்த்தி கேட்டுக்கொள்கிறோம்.

அதைத்தாண்டி இந்த சுற்றுச்சூழலில் எந்தவொரு மாசு பாட்டையும் உள்ளடக்கவில்லை என்று தெளிவாக சொல்லிக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால் அங்கே எந்தவொரு நில மாசுபாட்டுக்கு எந்த ஒரு ரசாயன பொருளையும் நாங்கள் எங்கள் வேலைக்கு பயன்படுத்தாததால் எங்களுக்கு எந்தவொரு நில மாசுபாட்டிற்கும் வாய்ப்பில்லை. இரண்டாவதாக நீர் மாசுபாடு அங்கு நடைபெறுதற்கான அறிகுறிகளும் அங்கு இருப்பதாக எங்களுக்கு தெரியவில்லை. என்ன காரணம் என்றல் அதில் கிடைக்கக்கூடிய சுனைநீர் அண்மையில் இருக்கக்கூடிய விவசாய நிலங்களுக்கு ஒரு நீர் பாசனமாகத்தான்

பயன்படுகிறதே தவிர்த்து எந்தவொரு தேங்கின நீர் அமைப்பாகவோ எதுவும் இருக்கிற மாதிரி இல்லை. இப்போது இருக்கக் கூடிய நவீன தொழில நுட்பத்தில் பார்த்தீர்கள் என்றால், இந்த அதிக ஒலி எழுப்பக்கூடிய, அந்த டெஸிபல் அளவு அதிகமாக இருக்கக் கூடிய எந்த ஒரு இயந்திரத்தையும் நாங்கள் பயன்படுத்தி எடுக்கவில்லை. அதைத்தாண்டி அரசு விதிமுறைக்கு உட்பட்டு, அரசாங்கம், நிர்ணயித்த அந்த அளவுகளில்தான் அந்த கற்களோட அளவும் வெட்டி எடுக்கப்படுவதால் எந்தவொரு விதி மீறலும் அங்கே நாங்கள் செய்வதில்லை. இதை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு அதிகாரி ஆகிய ஆட்சித்தலைவர் ஐயா அவர்கள் ஒரு போர்க்கால அடிப்படையில் எங்களது வளத்தை மேம்படுத்துவதற்கு இந்த குவாரியை திறந்து கொடுத்தீர்கள் என்றால் நாங்கள் கனிவோடு கேட்டுக்கொள்கிறோம். இதைத்தாண்டி பார்த்தீர்கள் என்றால் இந்த தொழிலை அடிப்படையாக வைத்து, குவாரி தொழில் பார்த்தீர்கள் என்றால் ஐம்பது ஆண்டுகாலமாக இந்த பகுதியில் நடைபெறுகிறது. இதை அடிப்படையாக வைத்து மற்ற கனரக வாகனங்கள், மற்ற வாகனங்கள் எல்லாம் பார்த்தீர்கள் என்றால் இதை நம்பி ஒரு நூறு, இருநூறு குடும்பங்கள் பிழைக்கிறது. அன்பர் ஒருவர் சொன்னார், இந்த ரோடு எல்லாம் அதிக வெயிட்டினால் அந்த வழியாக போவதால், வருவதால் ரோடு சேதமாவதாக ஒரு குற்றச்சாட்டு வைத்தார். அவரோட பார்வையில் அப்படி இருக்கலாம். ஆனால் எங்களுடைய பார்வையில், சில சமயங்களில் ஏன் பல சமயங்களில் அரசாங்கம் போடுகின்ற ரோடே கையில் எடுக்கும் அளவிற்கு வந்து விடுகிறது. ஆனால் இந்த குவாரி மக்கள் எல்லாம், அந்த வழியாக அதிக டன்களில் போவது, வருவது என்பதினால் தனது சொந்த முதலீட்டில் கூட தரமான தார்சாலைகள் அமைத்து கொடுத்திருக்கிறார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இந்த அடிப்படை எல்லாம் வைத்து எங்களுடைய வாழ்வாதாரத்தை மீட்டுத் தருமாறு, இந்த குவாரிகளை திரும்ப திறந்தீர்கள் என்றால் அதை வைத்து எங்களுடைய உணவுத்தேவை, பொருளாதார அடிப்படை தேவை வசதிகள் எல்லாம் மேற்கொண்டு, நாங்கள்தான் படிக்கவில்லை, எங்களுடைய பிள்ளை குட்டிகளாவது படிக்கும் என்ற நம்பிக்கையில் இந்த வருவாயை

எதிர்பார்க்கிறேன். அதை திறந்து கொடுத்தீர்கள் என்றால் இது எல்லாம் நிறைவேறும் என்று பணிவோடு சொல்லிக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறுகிறேன். வணக்கம்.

16. திருமதி. செல்வி, கோணமோரி:

ஐயா, வணக்கம். குவாரியில் தான் வேலை செய்கிறோம். நாற்பது வீடுகள் அங்கேயேதான் வேலை செய்கிறோம். வேலை நிறுத்தத்தினால் எங்களுக்கும் நிறைய கஷ்டம். எந்த பாதிப்பும் இல்லை. ஆடு, மாடுகளுக்கு எதுவும் இல்லை. சுற்றி காம்பவுண்ட் வால் எல்லாம் கட்டி இருக்கிறார்கள். எதுவும் இல்லை. நீங்கள் வேலை தொடங்க வாய்ப்பு எங்களுக்கு கொடுக்க வேண்டும்.

17. திருமதி. முத்துமாரி , கோணமோரி:

கலெக்டர் சாருக்கு வணக்கம். எங்களுடைய வீட்டுக்காரர் வேலை செய்து வாடகைக்கு ஓட்டிக் கொண்டு இருந்தார். இப்பொழுது அந்த வாடகைக்கு ஓட்ட முடியவில்லை. பிரச்சினையில் இருக்கிறது. எங்களால் செய்ய முடியவில்லை. அந்த குவாரியை திறக்க வேண்டும் சார். ரொம்ப வேண்டி கேட்கிறோம் சார்.

18. திருமதி. சத்யா, வீரப்பன்பாளையம்:

என் பெயர் சத்யா, வீரப்பன்பாளையத்தில் இருந்து வந்திருக்கிறேன். என்னுடைய வீட்டுக்காரர் அங்கேதான் வேலை செய்கிறார். டிரைவராக இருக்கிறார். இப்போது ஒரு வருடமாக வேலை இல்லை. பிள்ளைகளுக்கு ஃபீஸ் கட்ட முடியவில்லை. இந்த குவாரி இருப்பதனால் எங்களுக்கு நல்லதுதான் நடந்து கொண்டிருக்கிறது. ஃபீஸ் கட்டுவார்கள், உடம்பு சரியில்லை என்றால் ஆஸ்பத்திரி செலவுக்கு உதவுவார்கள். இந்த குவாரியை ஓபன் பண்ணி விடுங்கள். வணக்கம்.

19. திரு. குமாரவேல், கொங்கணாபுரம்:

என் பெயர், குமாரவேல், கொங்கணாபுரத்தில் இருந்து வந்திருக்கிறேன். எங்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாததினால் நான் குவாரியில் வேலை செய்து

கொண்டு இருக்கிறேன். இருபது வருடங்களாக வேலை செய்து கொண்டிருக்கிறேன். இந்த குவாரியால் எந்த பாதிப்பும் பக்கத்தில் வரவில்லை. எல்லாம் நல்லபடியாக செய்து கொடுத்தார்கள். குடும்பத்திற்கு அனைத்து வசதிகளையும் செய்து தருகிறார்கள். சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் வராமல் கண்ட்ரோலில் வைத்து நல்லபடியாக வேலை செய்து வருகிறார்கள். எங்களுக்கு வேலை கொடுக்குமாறு தாழ்ந்து பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

20. <u>திரு. முருகன், எடப்பாடி:</u>

மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு இந்த கிரானைட் பணியானது குவாரி இங்கே இயங்குவதால் அந்த கிரானைட் சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் நமது HR & CE சம்பந்தப்பட்ட ஆலயங்களக்கு அதிலே வேஸ்ட் ஆகக்கூடிய கற்களையும் நமது இடைப்பாடி மாநகரில் அமைந்துள்ள அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயிலில் எறக்குறைய முப்பத்து ஐந்து லட்சம் முதல் நாற்பது லட்சம் ரூபாய்க்கு கோவிலை புனரமைத்து நமக்கு, பொதுமக்களின் வழிபாட்டிற்கு கொடுத்து இருக்கிறார்கள். அது மட்டும் இல்லாது, சுற்றி இருக்கக்கூடிய ஆலயங்களுக்கு, அங்கே வரக்கூடிய அந்த சிறிய கற்களை எல்லாம் கொடுத்து பேஸ்மட்டம் அமைப்பது போன்ற திருப்பணிகளுக்கும், நீர் நிலை தொட்டிகள் கட்டி கொடுப்பதற்கும் அவர்கள் நமக்கு பெரும் கருணை செய்து கொண்டு வருகிறார்கள். அது மட்டும் அல்லாது பொதுமக்களுக்கு தேவையான அன்னதானங்களுக்கு வருடத்தில் ஒருமுறை செய்து கொடுக்கிறார்கள். இது போன்ற பல திருக்கோயில்கள், சுற்றி இருக்கக்கூடிய ஆலயங்களுக்கு கொடுக்கின்றாக்ரள். அவர்கள் இது போன்று, நிறைய ஏழைகளுக்கு செய்து வருகிறார்கள். ஆகவே இந்த குவாரிகள் இயக்குவதால் நமது பழமையான ஆலயங்கள் எல்லாம் புனரமைப்பதற்கு அவர்களும் ஒரு ஊன்றுகோலாக, நமக்கு உதவியாக இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொண்டு அவர்களுக்கு இந்த கிரானைட் பணியானது மேலும் வளர வேண்டும் என்று இந்த நேரத்தில் வாழ்த்தி வணங்கிக் கொண்டு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி.

21. <u>திரு. துரைசாமி, கரட்டுப்பட்டி:</u>

ஐயா வணக்கம். என் பெயர் துரைசாமி, கரட்டுப்பட்டி ஊர் இந்த குவாரியை நம்பித்தான் இவ்வளவு நாட்களாக இருக்கிறோம். இந்த குவாரியை எவ்வளவு சீக்கிரம் திறந்து வைக்க முடியுமோ கொஞ்சம் திறந்து வையுங்கள் சார். நன்றி வணக்கம்.

22. <u>திரு. பிரவீன்குமார், சங்ககிரி:</u>

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் வணக்கம். பொது மக்களுக்கும் வணக்கம் நான் ஒரு ஐந்து டிப்பர் லாரி ஓட்டிக் கொண்டிருக்கிறேன் குவாரியில். அது எல்லாம் டியூவில்தான் ஒடிக்கொண்டிருக்கிறது. அதை நம்பி நிறைய டிரைவர்கள் இருக்கிறார்கள். சில ஆண்டுகள் குவாரி செய்லபடாததால் எனது லாரியை சீஸ் கூடசெய்து கொண்டு சென்றுவிட்டார்கள், இரண்டு லாரி, தயவு செய்து இந்த குவாரியை மீண்டும் திறக்குமாறு கேட்டுக்கொள்கிறேன், ப்ளீஸ்.

23. <u>திரு. தமிழழகன், சங்ககிரி:</u>

எல்லோருக்கும் வணக்கம் என் பெயர் தமிழழகன், நான் மூன்று வருடங்களாக எங்கள் ஊர் பக்கம் சூப்பர்வைசர் ஆக வேலை பார்க்கிறேன். இப்போது ராயல்டி ஃபண்ட் மூலமாக நமது நாட்டின் வளர்ச்சி அதிகமாகும், அதனால் நீங்கள் இந்த குவாரியை திறப்பதால் கண்டிப்பாக நாட்டின் வளர்ச்சி அதிகமாகும் கண்டிபாக நீங்கள் திறந்து கொடுங்கள்.

24. <u>திரு. இரமேஷ், பறையங்காட்டானூர்:</u>

மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், வந்திருக்கக் கூடிய பொது மக்களுக்கும் வணக்கம். தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி பறையங்காட்டானூரை சேர்ந்த ரமேஷ் என் பெயர், எங்கள் பஞ்சாயத்து, சங்ககிரி ஒன்றியத்திலேயே பெரிய பஞ்சாயத்து. அந்தப் பகுதியில் நிறைய கிரானைட் இருக்கிறது. ஆனால் எல்லோரும் கோவிலுக்கு செய்தார்கள், எடப்பாடிக்கு

செய்தார்கள், அங்கே செய்தார்கள், இங்கே செய்தார்கள் என கூறினார்கள். நாங்களும் இவ்வளவு நாட்களாக இதே பஞ்சாயத்தில்தான் இருக்கிறோம். எந்த ஒரு குவாரியாவது, பக்கத்தில் புட்டமனையில் ஸ்கூல் இருக்கிறது. அந்த ஸ்கூல் பல நாளாக ஒழுகி டேமேஜ் ஆகிவிட்டது. மறுபடியும் பிடிஓ–விற்கு தகவல் ஹெச் எம் சொல்லி உடனே வந்து பார்த்து கிட்ட இருந்து ஏஇ, பிடிஒ எல்லாம் செய்து கொடுத்தார்கள். இப்பாடி ஒவ்வொரு வேலையும் பஞ்சாயத்து தலைவர் வந்து, அது இல்லாமல், அந்த ஸ்கூலிற்கு தண்ணீர் வசதி, ஒரு இரண்டு பைப் நாற்பது அடி பைப் என்றாலும் எந்த குவாரிகாரரும் அங்கே வந்து போடுவது கிடையாது. அது மட்டும் கிடையாது, அதாவது குவாரியில் கல் ஓட்டுகிறார்கள். ரோட்டில். பயங்கர டேமேஜ். பைப் ஓரத்திலேயே போடுவதால் உடைந்து போய்விடுகிறது. ஒரு குவாரிகாரர் கூட இருபது அடிபைப் போட்டதாக சரித்திரமே கிடையாது இதெல்லாம், அதை செய்தார்கள், இதை செய்தார்கள் என்றால் பஞ்சாயத்து தலைவரும்தான் வந்திருக்கிறார். எதை செய்தாலும் நாங்கள் பஞ்சாயத்தில் இருந்து செய்து கொண்டால்தான். இத்தனை குவாரி இருக்கிறது. குவாரியில் செய்யணுமா என்று கூட கிடையாது. பல தடவை கேட்டு பார்த்தாகிவிட்டது. எந்த குவாரியும் ஒரு ரெஸ்பான்ஸ் கிடையாது. இப்படி இருக்கிறது. இதை ஒரு வரன்முறைபடுத்தி, மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வந்திருக்கிறீர்கள். இதை கொஞ்சம் சரி செய்து கொடுங்கள். ரோடு ரொம்ப டேமேஜ் ஆகிவிடுகிறது. பக்கமா நீங்கள்தான் ஃபண்ட் கொடுத்து போடுகிறீர்கள். அத்தனை வெயிட் வைத்து ஓட்டுவதினால் ரொம்ப டேமேஜ் ஆகிறது. இதை எல்லாம் வரன்முறைபடுத்தி ஐயா பண்ணி கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம்:</u>

இந்த கருத்து கேட்பு கூட்டத்தை நல்லபடியாக நடத்தி தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், பிற அரசு அலுவலர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் நன்றி கூறி கூட்டத்தினை இத்துடன் முடித்துக் கொள்ளலாம்.

எழுத்து பூர்வமான மனுக்கள் இருந்தால் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் நேரடியாக வந்து வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
சேலம்

மாவட்ட ஆட்சியர்,
சேலம்